Register No. | | | | | | | | |

**TA6A**

5157–22

(For the candidates admitted from 2017—2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Three – year Regular Course)

Third Year – Sixth Semester

## HUMAN RIGHTS LAW

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : 2½ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Examine the role played by the Supreme Court of India in protecting human rights.

   மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் இந்திய உச்சநீதிமன்றம் ஆற்றிய பங்கினை ஆராய்க.

2. What are the safeguards guaranteed by the Constitution against arbitrary arrest and detention?

   ஏதேசாதிகாரமான கைது மற்றும் தடுப்புக் காவலுக்கு எதிராக அரசியலமைப்புச் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வகையங்கள் யாவை?

3. Write a note on the rights of the citizens to take part in the Government of his country.

   தனது நாட்டு அரசாங்கத்தில் பங்கு எடுத்துக்கொள்ள குடிமக்களுக்கு உள்ள உரிமைகளைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Analyse the provisions of International Instruments regarding right to work.

   பணி உரிமை தொடர்புடைய சர்வதேச உடன்படிக்கைகளில் உள்ள வகையங்களைப் பற்றி ஆய்வு செய்க.

5. Explain the law relating to Police Surveillance in India with decided cases.

தீர்மானிக்கப்பட்ட வழக்குகள் கொண்டு இந்திய காவல்துறை கண்காணிப்பு தொடர்பான சட்டத்தைப் பற்றி விளக்குக.

6. What are your suggestions to eradicate the problem of 'extra-legal execution'?

'சட்டத்திற்கு புறம்பான மரண தண்டணை' பிரச்சனையை களைவது தொடர்பாக தங்களது ஆலோசனை யாது?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Atlantic Charter.

அட்லாண்டிக் சாசனம்.

(b) Fractured Societies.

நொறுங்கிய குடும்ப சமூகங்கள்.

(c) Rights of Disabled Persons.

மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள்.

(d) Beijing Declaration on the rights of women.

பெண் உரிமைகள் தொடர்பான பிஜிங் விளம்புகை.

(e) Local Self Government.

உள்ளாட்சி அதிகார அமைப்புகள்.

(f) Human Rights Court.

மனித உரிமைகள் நீதிமன்றம்.

(g) Right of Self determination.

சுய நிர்ணய உரிமை.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'X' was prosecuted for murder. He was forced to undergo 'Narco Analysis Test'. 'X's wife challenges the test as gross violation of Human Rights in the Supreme Court. Decide.

'X' என்பவர் மீது கொலை குற்றம் சாட்டப்பட்டு 'நார்கோ பகுப்பாய்வு சோதனை' -க்கு உட்படுத்தப்பட்டார். இந்த சோதனை ஒரு மனித உரிமை மீறல் என்று கூறி உச்சநீதிமன்றத்தில் 'X'-ன் மனைவி வழக்கு தொடர்கிறார். தீர்மானிக்கவும்.

9. Mr. N's farm lands were acquired by the state for road widening project. The compensation given to him was inadequate to make both ends meet. He challenges the land acquisition as violative of Art 21 of the Constitution in the Supreme Court. Can he succeed?

சாலை விரிவாக்கப் பணிகளுக்காக திரு. 'N' என்பவரது விவசாய நிலங்கள் அரசால் கையகப்படுத்தப்பட்டது. அவருக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை அவரது வாழ்வாதாரத்திற்கு போதுமானதாக இல்லை. அரசமைப்புச் சட்டம் உறுப்பு 21-க்கு புறம்பாக நிலம் கையகப்படுத்தப்பட்டிருப்பதாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அவரால் வெற்றி பெற முடியுமா?

10. Miss 'A', a famous actress made some controversial statements about pre-marital sex. Multiple prosecutions were initiated against her in various Subordinate courts in state 'X'. She approaches the High Court of state 'X' and seeks quashing of all the cases. Can she succeed?

திருமணத்திற்கு முந்தைய பாலுறவு குறித்து செல்வி A என்கிற பிரபல திரைப்பட நடிகை சில சச்சரவான அறிக்கைகளை வெளியிட்டு இருந்தார். அவர் மீது 'X' மாநிலத்தில் உள்ள பல கீழமை நீதிமன்றங்களில் வழக்கு பதியப்பட்டது. அவை அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டி 'X' மாநில உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அவரால் வெற்றி பெற முடியுமா?

---

Register No. | | | | | | | | |

**TA6B** 5158–22

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Three – year Regular Course)

Third Year – Sixth Semester

CRIMINOLOGY AND PENOLOGY

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "All wrongs are not crimes" – Explain it with principles.

   "எல்லா தவறுகளும் குற்றம் ஆவதில்லை" – நெறிமுறைகளுடன் விளக்குக.

2. Discuss the various environmental factors which are responsible for indulging in crime.

   குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கு காரணமாக அமையும் பல்வேறு சூழல் காரணிகளை விவாதிக்க.

3. Explain the salient features of Probation of Offenders Act, 1958.

   குற்றவாளிகளின் நன்னடத்தை கண்காணிப்பு விடுதலைச் சட்டம், 1958–ன் முக்கிய அம்சங்களை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the influence of Alcohol on the causation of crime.

   குற்றம்புரிவதற்கான காரணிகளில் மதுவின் தாக்கத்தினை விளக்குக.

5. Write an essay about organized crime.

   ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தினைப் பற்றி ஒரு கட்டுரை எழுது.

6. What is Deterrent theory? Make difference between Deterrent and Retributive theory.

பயமுறுத்தும் கோட்பாடு என்றால் என்ன? பயமுறுத்தும் கோட்பாட்டிற்கும், பழி வாங்கும் கோட்பாட்டிற்கு இடையே வேறுபாடு செய்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Free-will theory

தன் விருப்பக் கருத்தியல்

(b) Question of Sentence

தண்டனையைப் பற்றிக் கேட்டல்

(c) International Crimes

சர்வதேச குற்றங்கள்

(d) Child Abuse

குழந்தைகளை தவறாக பயன்படுத்துதல்

(e) Domestic Violence

குடும்ப வன்முறை

(f) Prison Education

சிறைக் கல்வி

(g) Cyber Piracy.

இணைய திருட்டு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The session judge had refused bail to the child on the grounds that,

(a) the trial is yet to commence

(b) the case against the co-accused, who are not juveniles, are also pending in other courts

(c) the release of the petitioner may affect the trial in the main case also.

Decide with reasons and provisions of law.

ஒரு குழந்தைக்கு அமர்வு நீதிமன்றமானது கீழ்க்கண்ட காரணங்களுக்காக ஜாமீன் தர மறுத்தது. அவை

(அ) விசாரணை, ஆரம்பிக்கும் தருவாயில் உள்ளது

(ஆ) இவருடன் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் இளஞ்சிறார் அல்லாதவர்கள். மேலும் அவர்களுடைய வழக்கு வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளது

(இ) மனுதாரரின் விடுதலையானது இம்முக்கிய வழக்கின் விசாரணையை பாதிக்கலாம். சட்ட வகையங்களுடனும் மற்றும் காரணங்களுடன் தீர்மானிக்க.

9. The killers in their examination under Section 313 of the Criminal Procedure Code, one of them even prior to the examination as well, had not admitted their guilt but told the court that they were proud of what they had done. The convicts did not even file an appeal from the judgment. Analyse the above case study in criminological aspect.

குற்றவியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 313ன் கீழ், நீதிமன்றச் செயல்படும் போது கொலைகாரர்களில் ஒருவர் அதிலும் விசாரணைக்கு முன்பு குற்றத்தை ஒப்புக்கொள்ளாது மட்டுமல்லாமல், நீதிமன்றத்தில், நாங்கள் என்ன செய்தோமோ அதற்காக அவர்கள் பெருமைப்படுவதாக கூறினார்கள். மேலும் அவர்கள் மேல் முறையீட்டிற்காக எந்த மனுவும் தீர்ப்பினை எதிர்த்து தாக்கல் செய்யவில்லை. குற்றாய்வியலின் அடிப்படையில் இந்த வழக்கை ஆராயவும்.

10. Madhu Mehta had filed a mercy petition before the President of India. But the said mercy petition was not considered until 8 years. Thereafter, he filed a petition before the Supreme Court for the delay of 8 years in the disposal of the mercy petition. Whether he will succeed in his action. Decide.

மது மேத்தா என்பவர் இந்திய ஜனாதிபதியிடம் ஒரு கருணை மனுவினை தாக்கல் செய்திருந்தார். ஆனால் எட்டு வருடங்கள் ஆகியும், அக்கருணை மனுவானது கருத்தில் கொள்ளப்படாமல் இருந்தது. அதன் பிறகு, இவ்வாறான 8 வருடங்கள் கால தாமதத்தனை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனுவினை தாக்கல் செய்தார். இதில் அவர் வெற்றி பெறுவாரா? தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தீர்மானிக்க.

---

Register No. | | | | | | | | |

**TA6C**

**5251–22**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Three-year Regular Course)

Third Year – Sixth Semester

INTELLECTUAL PROPERTY LAW

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : 2½ hours    Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Copyright is protection in form and not in idea", Explain.

   "ஒரு படைப்பானது பதிப்புரிமைக்கான பாதுகாப்பு பெற்றிட அது ஒரு வடிவத்தில் இருக்க வேண்டும் பதிப்புரிமை வெறும் கருத்துருவைப் பாதுகாப்பது இல்லை" - விளக்குக.

2. What is surrender and revocation of patents? Under what circumstances patent can be surrendered and revoked?

   புத்தாக்க உரிமைகளை சரணடைவு செய்தலும் மற்றும் அதனை ரத்து செய்தல் என்றால் என்ன? எந்தெந்த சூழ்நிலைகளில் புத்தாக்கத்தை சரணடைவு மற்றும் இரத்து செய்தல் முடியும்?

3. What is meant by passing off of trade mark? Explain the nature and consequences of passing off in detail with relevant case laws.

   வணிகப் போலி என்றால் என்ன? வணிகப்போலியால் ஏற்படக்கூடிய விளைவுகள் மற்றும் அதன் தன்மையை தகுந்த வழக்குகளுடன் விவரி.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the rights conferred by the Copyright Act to the legal representatives of the registered owner?

   பதிப்புரிமை சட்டத்தின்படி அதன் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளரின் சட்டபூர்வ வாரிசுகளுக்கு உள்ள உரிமைகள் யாவை?

5. Explain the procedure for certification of trade mark.

நற்சான்று வணிகக்குறி பெறுவதற்கான வழிமுறைகளை பற்றி விளக்குக.

6. Explain the salient features of Patent Amendment Act, 2005.

2005-ம் ஆண்டின் புத்தாக்க உரிமை திருத்த சட்டத்தின் முக்கிய கூறுகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Patent agent

புத்தாக்க முகவர்

(b) Duration of copy right

பதிப்புரிமையின் கால அளவு

(c) Anton pillar order

ஆண்டன் பில்லர் ஆணை

(d) Refusal of registration of trade mark

வணிகக் குறியின் பதிவு செய்யப்படும் தன்மையை மறுத்தல்

(e) Procedure for registration of design

வடிவமைப்புகளின் பதிவுக்கான நடைமுறை

(f) Deceptive similarity

ஏமாற்றுவகை ஒற்றுமை

(g) Broadcasting rights.

ஒளிப்பரப்பு உரிமைகள்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons :

பின்வருவனவற்றுள் <u>இரண்டிற்கு</u> சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Sudha got a trade mark registered in her name. Radha used the same trade mark in the same course of business prior to her. Can she file a passing-off action against the registered trade mark owner Sudha.

சுதா என்பவர் ஓர் வணிக குறியீட்டை தன் பெயரில் பதிவு செய்தார். ஆனால் அவருக்கு முன்பாக அந்த வணிக குறியீட்டை அதே வணிகத்திற்காக ராதா என்பவர் பயன்படுத்தி வருகிறார். ராதா, சுதாவிற்கு எதிராக வணிக போலி அடிப்படையில் நடவடிக்கை எடுக்க முடியுமா?

9. Maniram is a Siddha Doctor. He invented a medicine from a herbal plant to cure diabetes. He is willing to get patent for his invention and advise him.

மணிராம் என்பவர் ஒரு சித்த மருத்துவர். அவர் சர்க்கரை நோயினை குணப்படுத்துகின்ற மருந்து ஒன்றினை மூலிகைத் தாவரம் ஒன்றிலிருந்து கண்டுபிடிக்கின்றார். அவர் தனது கண்டுபிடிப்பிற்கு காப்புரிமை பெற விரும்புகிறார் அவருக்கு அறிவுரை வழங்கவும்.

10. Whirlpool home appliances (P) Ltd. company obtained patent for its invention. The company failed to pay the renewal fees. The patent office ceased the company's patent. Can it be restored?

வேர்ல்ஃபூல் ஹோம் அப்ளையன்ஸஸ் (பி) லிட் என்னும் நிறுவனம் அதன் கண்டுபிடிப்பு ஒன்றிற்கு காப்புரிமை பெற்றிருந்தது. அந்த நிறுவனம் தனது காப்புரிமைக்கு புதுப்பித்தல் கட்டணம் செலுத்த தவறிவிட்டது. எனவே காப்புரிமை அலுவலகம் காப்புரிமையை நிறுத்தி வைத்து விட்டது. வேர்ல்ஃபூல் நிறுவனம் அதை திரும்ப பெற இயலுமா?

---